DINAMALAR 24 DEC 2007

# மார்த்தாண்டம் கல்லூரியில் மரக்கன்று நடும் விழா

**மார்த்தாண்டம், டிச. 24–**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் மரக்கன்று நடும் விழா மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது.

ஈஷா பவுண்டேஷன் சார்பில் தமிழகத்தில் பசுமைக்கரங்கள் திட்டத்தில் இரண்டரை கோடி மரங்கள் நடப்படுகிறது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் மரம் நடும் விழா நடந்தது.

விழாவிற்கு கல்லூரி தாளாளர் டாக்டர் பால்ராஜ் தலைமை வகித்தார். இயற்பியல் துறைத்தலைவர் பேராசிரியர் தேவகுமார் சாமுவேல் வரவேற்றார். மாவட்ட பஞ்., தலைவர் அஜிதா மனோதங்கராஜ் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். குழித்துறை கல்வி மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோபிரகாஷ், குமரி மாவட்ட வன அலுவலர் சுந்தர்ராஜு, பேராசிரியர் தம்பிதங்ககுமரன், ஈஷா பவுண்டேஷன் சார்பில் கண்ணன் ஆகியோர் பேசினர்.

கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் இயற்பியல் பிரிவு மாணவ, மாணவிகள் அனைவருக்கும் மரக்கன்றுகள் இலவசமாக ஈஷா பவுண்டேசன் சார்பில் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி இயற்பியல் துறை செய்திருந்தது.